# படித்ததில் பிடித்தது!

திருமணமான பெண் ஒருத்தி தன் தாயாரைத் தேடி வந்தாள்.அவளுடைய முகம் வருத்தமுற்றிருந்தது. கண்கள் கலங்கியிருந்தன.தாயார் தன் மகளைப் பார்த்து, 'என்ன விஷயம்?' என்று விசாரித்தார். மகள் தன்னுடைய கஷ்டங்களை எல்லா ஒவ்வொன்றாக தயாரிடம் சொன்னாள். இவற்றிலிருந்து எப்படி விடுபடப் போகிறேன் என்று தெரிய வில்லை என்று கூறி தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள் மகள்.

இவற்றை எல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்ட தாயார், தன் மகளை சமையலறைக்கு அழைத்துச் சென்றார். மூன்று பாத்திரங்களில் தண்ணீரை ஊற்றி, எரியும் அடுப்பிலே அதையெல்லாம் எடுத்து வைத்தார்.சிறிது நேரத்தில் தண்ணீர் கொதிக்க ஆரம்பித்தது. ஒரு பாத்திரத்திலே கேரட்டை எடுத்துப் போட்டார். மற்றொரு பாத்திரத்தில் முட்டையை போட்டார். இன்னொரு பாத்திரத்தில் கொஞ்சம் காப்பித்தூளை போட்டார்.

அந்தப் பெண்ணுக்கு எதுவும் புரியவில்லை. இருந்தாலும் அமைதியாக கவனித்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில், அந்தப் பாத்திரங்களை கீழே இறக்கி வைத்தார் தாயார். கேரட்டையும், முட்டையையும் எடுத்து வெளியே வைத்தார். காபியையும் ஒரு கோப்பையிலே ஊற்றினார். மகளே இதெல்லாம் என்ன என்று தெரிகிறதா? என்று கேட்டார் தாயார். அதற்கு அது கேரட், அடுத்தது முட்டை, இது காப்பி என்று கூறினாள் மகள்.

சரி, கேரட்டை தொட்டுப் பார் எப்படியிருக்கு? என்று கேட்டார் தாயார். தொட்டுப் பார்த்து, ரொம்ப மென்மையாக இருக்கு என்று கூறினாள் மகள். முட்டையைத் தொட்டுப் பார்த்து எப்படியிருக்கு என்று சொல் என்று கூறினார் தாயார்.கொஞ்சம் கடினமாக இருக்கிறது என்று சொன்னாள் மகள். அடுத்தபடியாக காப்பியை எடுத்து குடி என்றார் தாயார்.காபியை குடித்துவிட்டு, ரொம்ப சுவையாக இருக்கிறது என்று கூறினாள் மகள். எதற்கு இந்த வேடிக்கை? என்று தாயிடம் கேட்டாள் மகள்.

அதற்கு பதில் அளித்த தாய், மகளே கொஞ்ச நேரத்திற்கு முன்பு இந்த மூன்று பொருள்களையும் ஒரே மாதிரி தண்ணீரில்தான் கொதிக்க வைத்தோம்.ஒரே நேரத்தில் கீழே இறக்கி வைத்தோம். ஆனால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கிறது. இந்தக் கேரட் ஆரம்பத்திலே எவ்வளவு கடினமாக இருந்தது? ஆனால் தண்ணீரில் கொதிக்க வைத்தவுடன் தன்னுடைய இயல்புக்கு நேர்மாறாக மென்மையானதாக மாறிவிட்டது.

இந்த முட்டைக்குள்ளே திரவ நிலையிலே இருந்த கரு கொதிக்க வைத்ததும் கடினமாக ஆகிவிட்டது. காப்பியைப் பார். அது அந்த தண்ணீரையே சுவை மிக்க பானமாக மாற்றிவிட்டது. மகளே, வாழ்க்கையில் கஷ்டங்கள் என்பது இப்படி கொதிக்க வைக்கிற மாதிரிதான். இதை நாம் எந்த ரூபத்தில் சந்திக்கப் போகிறோம் என்பதில்தான் விஷயமே இருக்கிறது என்று கூறினார் தாய்.

உடனே மகள் முகத்தில் தெளிவு பிறந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டாள். கவலை மறந்து போய்விட்டது. பறந்து போய்விட்டது. முகத்தில் தெளிவு பிறந்தது.
எந்த நிலைமையையும் சந்திப்பதற்கு, சமாளிப்பதற்கு உரிய துணிச்சல், மன உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம்.
இந்த கதையை நமது பிள்ளைகளுக்கும் அவசியம் சொல்லுங்கள்

முக்காலுக்கு ஏகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால் கண்டு அஞ்சாமுன் - விக்கி
இருமாமுன் மாகாணிக்கு ஏகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரைஇன்று ஓது - கவி காளமேகம்.

இப்பாடலின் பொருள்:

மூன்றாவது காலாகிய ஊன்றுகோலை நாடுமுன்,
முன் நரை வருமுன்,
காலன் நம்மை நாடுமுன்,
விக்கல்,இருமல் போன்ற நோய்கள் வருமுன்,
இடுகாட்டிற்குச் செல்லுமுன்,
கச்சி ஏகாம்பரரின் திருவடிகளை,ஓதி உணர்ந்து சரணடைவாயாக!- என்கிறார் கவி காளமேகம்!

இதில் எண்களின் பின்ன வடிவங்கள், சாமர்த்தியமாகக் கையாளப் பட்டிருப்பதுதான் இதன் சிறப்பு!

முக்கால் - 3/4
அரை - 1/2
கால் - 1/4
அரைக்கால்- 1/8
இருமா - 1/10
மாகாணி - 1/16
மா (ஒருமா) - 1/20
கீழரை - 1/640

தமிழ் எவ்வளவு சிறப்பானது என்பதும், அதைக் கவிஞர்கள் எப்படித் திறமையாகக் கையாண்டுள்ளார்கள் என்பதும் வியப்பிற்குறியது!

உதிரும் இலைகளை;
செடிகள் சுமக்க
நினைத்தால்,
பூ கூட பூக்காது!
அது போல,
நாம் முடிந்ததையும்;
இழந்ததையும்;
மனதில் சுமந்தால்,
வாழ்வு ஒருநாளும்
சிறக்காது...!
21-03-2020

எத்தனை முறை
நீ ஏமாற்றப்பட்டாலும்
ஒருபோதும்
அடுத்தவரை ஏமாற்ற
கற்றுக்கொள்ளாதே!
அவரவர் பலன்
அவரவர் அனுவிப்பர்
நேர்மைக்கு என்றுமே
அழிவில்லை!
21-03-2020

தானாக உயரும்
வயது
விடாமல் துரத்தும்
காலம்
தடுக்க முடியாத
நேரம்
கடக்கத் துடிக்கும்
இளமை
காலைத் தடுக்கும்
சமுகம்
தொட வேண்டிய
இலக்கு
இத்தனை போரட்டம்
தான் வாழ்க்கை.
21-03-2020

வாய்ப்புகள் விலகும் போது
அதை எண்ணி
கவலைப்படாதே...
எல்லாம் நன்மைக்கே என்று
தொடர்ந்து முயற்சி செய்...
மிகப்பெரும் வெற்றி
உனக்காக
காத்திருக்கும்....
21-03-2020

வார்த்தையால்
பேசுவதை விட
நன்றாக
வாழ்ந்து காட்டுவதே
சிறப்பு..
21-03-2020